**சிலவ் பிலான்டேசன் லிமிட்ட் - 2021**

**-----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலவ் பிலான்டேசன் லிமிடட்டின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| கணக்கீட்டு நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பந்தி இலக்கம் 51 மற்றும் 61 இன் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டளவில் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்துள்ள ரூபா 33,442,625 கிரயமான அலுவலக உபகரணங்கள், ரூபா 7,418,575 தொகையான மனைப் பொருட்கள் மற்றும் ரூபா 500,000 தொகையான இயந்திரங்கள் கம்பனியினால் தொடர்ந்து பயன்படுத்துப்பட்டிருந்தும் அந்த மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காணப்படுகின்ற பெறுமானத் தேய்வு முடிவடைந்து சில சொத்துக்கள் எச்சமாக மாறியுள்ளதுடன் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் காணப்படுவதனால் இந்த பெறுமானத் தேய்வு செய்து முடிவடைந்த சில சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே சில சொத்துக்கள் தற்பொழுது பௌதீக ரீதியாக காணப்படவில்லை.<br><br>தகமைபெற்ற ஒரு நிறுவனத்தினால் மீள்மதிப்புச் செய்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | எச்சமாக மாறியுள்ள சொத்துக்கள் மற்றும் பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துக்களை இனங்கண்டு கிரயத்திலிருந்து நீக்கி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகுதிச் சொத்துக்களின் இயலளவுப் பெறுமதியை மறுசீரமைப்புச் செய்து சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 109 மில்லியன் | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 109 மில்லியன் தொகையான 68 குத்தகை காணிகளுக்குரிய உறுதிகள் மற்றும் திட்ட வரைபடங்கள் கம்பனியிடம் இல்லை. அதன் காரணமாக காணிகள் சம்பந்தமாக கம்பனிக்கு உள்ள சட்டரீதியான உரிமை மற்றும் 1992 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 5,184 ஹெக்டயர் அளவான காணிகளின் தெளிவான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | 1992 ஆம் ஆண்டில் ஜனவசம மூலம் சிலாபம் பொருந்தோட்ட கம்பனிக்கு இக்காணியை ஒப்படைக்கும் சந்தர்ப்பம் வரையும் ஒப்படைக்கப்பட்ட பல காணிகளுக்காக நில அளவீடு சார்ந்த படங்கள் இருக்கவில்லை. பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவின் மூலம் நில அளவையாளர் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு கம்பனியின் காணிகளுக்கு நில அளவை சார்ந்த படம் வரைதல் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது 17 பெருந்தோட்ட பகுதிகளில் நில அளவை சார்ந்த படம் வரைதல் முடிவடைந்துள்ளது. | காணிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான உடன்படிக்கைகள், உறுதிகள், திட்ட வரைபடங்கள் முதலிய உரிய ஆவணங்கள் கம்பனியிடம் காணப்படுதல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் புற தொகுதியிலுள்ள 04 உத்தியோகத்தர்கள் மற்றும் ர்M தொகுதியிலுள்ள 08 உத்தியோகத்தர்களுக்கு சாரதிப் படியாக ரூபா 2,160,000 தொகையும் உத்தியோகபூர்வ | உயர் இயலுமையுள்ள ஊழியர்களின் சேவையை பெற்றுக்கொள்வதாயின் ஏனைய கம்பனிகளில் வழங்கப்படுகின்ற படிகள் மற்றும் சலுகைகளை வழங்க வேண்டியுள்ளது. அரசாங்க கம்பனிகளுக்கு தாக்கமேற்படுத்தும் சுற்றறிக்கைகளை வழங்குகின்ற நிறுவனங்கள்/ திணைக்களங்கள் வழங்குகின்ற சுற்றறிக்கைகள் முடியுமான அனைத்து | சுற்றறிக்கையின் பிரகாரம் படிகள் வழங்கப்பட வேண்டியதுடன் திருத்தங்கள் இருக்குமாயின் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமைகளைக் கொண்டிருக்காத MM 1-1 தொகுதியிலுள்ள 04 பதவிகள் மற்றும் துM 1-1 தொகுதியிலுள்ள 08 பதவிகளுக்கு போக்குவரத்துப்படியாக ரூபா 441,887 தொகையும், உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை பெற்றிருக்காத MM 1-1 தொகுதியிலுள்ள பதவியில் இருக்கும் ஒரு உத்தியோகத்தருக்கு எரிபொருள் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 87,060 தொகையும் செலுத்தப்பட்டது. கம்பனியின் HM, MM மற்றும் JM சம்பள தொகுதி தொடர்பாக சேவையாற்றுகின்ற 26 உத்தியோகத்தர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறைக்கான படி மற்றும் வேலையாள் படியாக ரூபா 11,463,112 தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. | சந்தர்ப்பங்களிலும் பின்பற்றப்பட்டிருந்தும் கண்டிப்பானது அற்றதுடன் கம்பனியின் மேம்பாட்டிற்காக அமைப்பு அகவிதிக்கு இணங்கிய வகையில் பணிப்பாளர் சபைக்கு தீர்மானம் எடுக்கும் முழுமையான அதிகாரம் உள்ளது.<br><br>சுற்றிக்கைகளும் அதிகாரச் சட்டமும் மோதுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிகாரச் சட்டத்திலுள்ள அதிகாரத்தினை சுற்றறிக்கையினால் மட்டுப்படுத்த முடியாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 631,978,959 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 265,644,659 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 366,334,300 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றதிற்கு தென்னையை உள்ளடக்கிய ஏனைய பயிர்ச் செய்கைகளில் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது விற்பனை வருமானம் ரூபா 376,943,855 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 43,044,825 ஆலும் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேங்காய் விற்பனையிலிருந்து பெற்ற வருமானம் ரூபா 801,718,449 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் அது ரூபா 592,179,338 ஆகும். அதற்கிணங்க அதனை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 35 சதவீத முன்னேற்றதினை சுட்டிக் காட்டியிருந்தது. முந்திரிகை விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் 2021 ஆம் ஆண்டில் ரூபா 55,637,407 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது அது ரூபா 37,352,690 ஆக இருந்ததனால் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 49 சதவீத முன்னேற்றமாகும். அவ்வாறே தென்னை நாற்றுக்களின் விற்பனை வருமானம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 131,273,229 ஆல் அதாவது 1196 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே கம்பனியின் 2020 ஆம் ஆண்டில் ரூபா 135,574,801 ஆல் நிருவாகச் செலவுகள் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 206,940,871 வரை ரூபா 75,236,976 ஆல் அதாவது 35 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் 3:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதம் 2:1 ஆகும்.

- மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 50 சதவீதமாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதமான 41 சதவீதத்துடன் ஒப்பிடும் போது மொத்த இலாப விகிதம் 9 சதவீத்தால் அதிகரித்திருந்தது.

- மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதம் 49 சதவீதமாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதமான 42 சதவீத்ததுடன் ஒப்பிடும் போது தேறிய இலாப விகிதம் 7 சதவீத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட:டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கம்பனியின் அமைப்பு புறவிதியின் குறிக்கோள்களுக்கு இணங்க கடன் வழங்கும் குறிக்கோள் அதில் இல்லாதிருந்த போதிலும் கம்பனியானது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, எல்கடுவ பொருந்தோட்ட கம்பனி, இலங்கை அரசாங்க பொருந்தோட்ட கூட்டுத்தாபனம், அரசாங்க வழங்கல் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு மொத்தமாக ரூபா 105 மில்லியன் கடன் பணமாக 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை கடன் பணமும் அதற்குரிய வட்டியுமான ரூபா 72.4 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | சிலாபம் பெருந்தோட்ட கம்பனியால் அரசாங்க நிறுவனங்களுக்கு குறுங்கால தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக 2010 ஆம் ஆண்டில் அமைச்சு செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கூறிய கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. உரிய கடன் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக கடன் வழங்கிய ஆண்டிலிருந்து பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் உரிய கடன் பணத்தையும் திரண்ட வட்டியையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் குறிக்கோள்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வழங்கியுள்ள கடன் பணத்தையும் வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்குச் சொந்தமான ஹீம்மெலியாகார தோட்டத்தில் கேணியை தோண்டுதல் மற்றும் கேணியை புனரமைப்புச் செய்தல் செயற்பாடு ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலமாக நிறுத்தப்பட்டிருந்ததனால் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் வேலையை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. ஒப்பந்தம் செய்த தரப்பினரால் உடன்படிக்கையை மீறியது சம்பந்தமாக கம்பனியால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய செயற்பாட்டினை பூர்த்திசெய்வதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையினை இரத்துச் செய்து கேணியை புனரமைப்புச் செய்வது சம்பந்தமாக எதிர்காலத்தில் சிலாபம் பெருந்தோட்ட கம்பனி ஒரு தீர்மானம் எடுப்பதற்கு நிர்ணயித்துள்ளது. | முறைப்படியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் தேவைப்படும் உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | எக்லீசியா மற்றும் மடுகஸ் ஆகார தோட்டங்களின் கேணிகளை புனரமைப்புச் செய்யும் இரண்டு செயற்திட்டங்களை 2021 செப்தெம்பர் 22 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் முடிவுறுத்தாமையின் அடிப்படையில் கடித மூலம் அடிக்கடி ஒப்பந்தத்தை நீடித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அச் செயற்பாட்டினை முடிவுறுத்துவதற்கு கணக்காய்வுத் திகதியான 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரையும் கம்பனிக்கு முடியாதிருந்தது. | ஒப்ந்ததத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட காலம் தொடர்பாக இரு தரப்பினர்களால் உடன்படிக்கை செய்து கொண்டிருந்த போதிலும் சுற்றாடல் மற்றும் காலநிலை காரணிகளின் அடிப்படையிலும் நாட்டில் காணப்பட்ட பல்வேறு சிக்கலான நிலைமையின் அடிப்படையிலும் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட காலம் உள்ளடங்கலாக செயற்பாட்டை முடிவுறுத்துவதற்கு பல சிக்கல்கள் உருவாகியிருந்தன. | முறைப்படியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் தேவைப்படும் உடன்படிக்கையின் பிரகாரம் உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கம்பனியின் மாதம்பை தோட்டத்தின் மடுகஸகார, எகேசியா மற்றும் ஹீன்மெலியாகார கேணிகளை புனரமைப்புச் செய்யும் போது அகற்றப்பட்ட மண் மற்றும் கிரவல் 01 கியூப்பின் விலை ரூபா 800 ஆக 2019 ஆகஸ்ட் 05 ஆந் திகதி கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் மாவட்ட விலைக் குழுவின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த விலைக்குழு அரையாண்டு ரீதியாக கூடி விலைகளை தீர்மானிப்பதுடன் 2021 ஆம் ஆண்டின் போதும் அகற்றப்பட்ட மண் மற்றும் கிரவல்/ மணல் கலந்த மண் 01 கியூப்பின் விலை 2019 இல் காணப்பட்ட விலையான ரூபா | ஒரு விலையினை நிர்ணயிப்பதற்கு ஏதாவது பகுப்பாய்வு செய்யப்படுவதாக இருந்தால் கேணி முழுவதனையும் வெட்டி முடிவுறுத்தப்பட்டு காட்சிப்படுத்துதல் தொகுதியாக்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க மேற்கொள்ளப்படுகின்ற மண் கருவிப் பரிசோதனைக்கு இணங்க மதிப்பீடு செய்தல் செய்யப்பட வேண்டியுள்ளது. அது நடைமுறையில் செய்யமுடியாத ஒரு செயற்பாடு என்பதனால் மாவட்ட விலை நிர்ணயிக்கும் | காணப்படுகின்ற சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்டு முறைப்படியாக விலையினை நிர்ணயித்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 800 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. எந்த நிலையப் பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது 2021 ஆம் ஆண்டிற்கான மாவட்ட விலைக் குழுவின் அறிக்கையின் உதவியோடு கடினமான மண்/ ஒட்டும் களிமண் என்ற தொகுதியின் கீழ் விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | குழுவினால் எடுக்கப்படுகின்ற பொது மதிப்பீடானது பெறுகைக்காக ஈடுபடுத்தப்பட்டது. | |
| (ஈ) | சீனுகல 05 ஆம் துறைப் பகுதியில் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தென்னைப் பயிர்ச் செய்கையில் 10,803 தென்னங் கன்றுகள் நாட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதற்காக ரூபா 27,449,008 செலவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரை 7,251 தென்னங்கன்றுகள் அதாவது ஒட்டுமொத்த தென்னங்கன்றுகளின் எண்ணிக்கையில் 67 சதவீதமானவை அழிவடைந்திருந்தது. மேலும் மேற்கூறிய தோட்ட வலயத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை தற்பொழுது 10 ஆண்டுகளைக் கடந்திருந்தும் உரிய பயிர்ச் செய்கைக்குத் தேவையான நீர் வழங்கல் நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. கம்பனி கடந்த 05 ஆண்டுகளில் புதர்களை வெட்டுவதற்காக ரூபா 663,346 செலவு செய்திருந்தும் தென்னைப் பயிர்ச் செய்கை நடவடிக்கையை வெற்றி பெறச் செய்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இப்பயிர்ச் செய்கை காணிக்காக நீர் வழங்கல் முறைமையை ஸ்தாபிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் இச்செலவுகளானது தொடக்க சந்தர்ப்பத்தில் காணியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளிலிருந்து நாற்றுக்களை நடுகை செய்து 2020 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவுகளாகும். நடுகைக் காலத்தின் போது பல நாற்றுக்கள் மிருகங்களினால் சேதமாக்கப்படுதல் மற்றும் சீனுகல தோட்டத்திற்கு அருகாமையிலுள்ள காணியில் ஏற்பட்ட தீ பரவியதன் காரணமாக நாற்றுக்களில் குறித்த அளவானவை அழிவடைந்திருந்தன. மேலும் தோட்ட முகாமைத்துவத்தினால் இக்காணியை பராமரிப்பதில் சில பலவீனம் சுட்டிக்காட்டப்பட்டதுடன் எதிர்காலத்தில் முறைப்படியாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் தோட்ட உத்தியோகத்தர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே தற்பொழுது நீர் மோட்டார்களை திருத்தம் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நீர் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. | தென்னைப் பயிர்ச் செய்கை அழிவடைவதற்கான காரணத்தை வெளிப்படுத்தி அதற்காக முறையான பரிகாரத்தினை ஈடுபடுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் கினியம தோட்டத்தில் முதிர்ச்சியடைந்த தென்னை பயிர்ச் செய்கைக்குள் கீழ்ப் பயிர்ச் செய்கையாக 2012 ஆம் ஆண்டின் பொது ‘‘கப்ருவன’’ விதைத் தேங்காய் செயற்திட்டமானது 58 | தென்னை ஆராய்ச்சி நிறுவனத்துடன் சிலாபம் பெருந்தோட்ட கம்பனி மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்க 2012 ஆம் ஆண்டின் போது இந்த விதைத் தேங்காய் தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் மகரந்த சேர்க்கை | கப்ருவன விதைத் தேங்காய் செயற்திட்டத்தினை வெற்றி பெறச் செய்வதற்கும் முதிர்ச்சியடந்த தென்னை பயிர்ச் செய்கையின் மூலம் எதிர்பார்த்த தேங்காய் |

ஹெக்டயரில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இக்காணியை பராமரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு இறுதிவரை ரூபா 7,355,146 செலவு செய்யப்பட்டிருந்தும் கப்ருவன விதைத் தேங்காய் விற்பனையின் மூலம் எந்த வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கப்ருவன விதைத் தேங்காய் செயற்திட்டம் தொடர்பாக நடுகை செய்யப்பட்ட குன்திரா மற்றும் சென்ராமன் ஆகிய இனங்களின் விற்பனையின் மூலம் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ரூபா 983,175 மேலதிக வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த வருமானத்தை கிரயத்துடன் செம்மையாக்கியதன் பின்னர் இன்னும் ரூபா 6,371,971 கிரயம் உள்ளடக்க வேண்டியுள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. சிலாபம் பெருந்தோட்ட கம்பனி 2021 ஆம் ஆண்டின் போது தேங்காய் மூலம் ஒரு ஹெக்டயரின் சராசரி உழைப்பு ரூபா 317,865 ஆக இருந்ததுடன் அதற்கிணங்க கினியம தோட்டத்தில் 58 ஹெக்டயர் காணியின் சாதாரண உழைப்பு ரூபா 18,436,223 ஆக இருக்க பேவண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது மேற்கூறிய 58 ஹெக்டயரில் உள்ள முதிர்ச்சியடைந்த தென்னை பயிர்ச் செய்கையிலிருந்து உழைக்கப்பட்டிருந்தது ரூபா 12,603,226 வருமானம் மாத்திரமாகும். அதற்கிணங்க ரூபா 5,832,997 தொகையான வருமானமானது இச்செயற்திட்டத்தின் காரணமாக கம்பனியினால் இழக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்த கப்ருவன விதைத் தேங்காய் செயற்திட்டத்தினால் நிலத்தை பயன்படுத்த முடியாததன் காரணமாகவும் காணியை பராமரிப்பதற்கு நடவடிக்கையானது இயற்கையாகவே இடம்பெறாமையின் காரணமாக நடுகை செய்யப்பட்டுள்ள இலைகள் குள்ளமான நாற்றுக்கள் குறைந்த மண் ஈரலிப்புத் தன்மைக்கும் சிகப்பு வண்டு பாதிப்பிற்கும் அதிகளவில் உள்ளாகும் நிலைமையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் துறையில் நோயற்ற இலைகள் குள்ளமான தென்னை நாற்றுக்களைப் பராமரித்தலானது மிகவும் சிக்கலான நிலைமையை உருவாக்கியதன் அடிப்படையில் விதைத் தேங்காய் தோட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வது தாமதமடைந்துள்ளது.

வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட செலவின் காரணமாகவும் ரூபா 15,204,968 மொத்த தொகையான நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (ஊ) | கம்பனியால் தென்னை பயிர்ச் செய்கை சபைக்காக நடுகை செய்யப்பட்ட 500,000 தென்னை நாற்றுக்களுக்கு மத்தியில் தற்பொழுது சபையினால் அகற்றப்படாத 08 தோட்டங்களில் காணப்படும் மிகுதியான தென்னை நாற்றுக்களின் அளவு 156,375 ஆக இருந்ததுடன் அந்த நாற்றுக்களை பராமரிப்பதற்காக கம்பனிக்கு மேலதிக செலவினை செலவு செய்ய வேண்டியிருந்தது. அவ்வாறே அந்த நாற்றுக்களில் சில நாற்றுக்கள் தற்பொழுது அழிவடைந்து காணப்படுகின்றது. | தென்னை நாற்றுக்களின் அளவில் தற்பொழுது எடுத்துச் செல்வதற்கு உள்ள மிகுதியான நாற்றுக்களின் அளவு 129,161 ஆகும். இது சம்பந்தமாக தொடர்ச்சியாக தென்னை பயிர்ச் செய்கை சபைக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன் முடியுமான அளவு விரைவாக எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்களினால் எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. | மிகுதியாகக் காணப்படும் நாற்றுக்களின் அளவினை சபைக்கு ஒப்படைப்பதன் மூலம் ஒன்றித்த செயற்திட்டத்தின் வெற்றித் தன்மையை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நிக்கவெரடிய தோட்டத்தின் துந்திரிவெவ, பனாபிடிகம, கல்கந்த, கோன்கஹமுல ஆகிய காணிகளில் 20 ஹெக்டயர்களில் முந்திரிகை பயிர்ச் செய்கை காணப்படுவதுடன் 2021 ஆம் ஆண்டின் போது அதன் மூலம் ரூபா 740,000 வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கம்பனி உண்மையாக உழைத்து ரூபா 287,600 மாத்திரமாகும். முந்திரிகை பயிர்ச்செய்கை முறைப்படியாக பராமரிக்கப்படாமை வருமானம் குறைவடைந்தமைக்கு நேரடியான காரணமாக இருந்தது. | அந்த பயிர்ச் செய்கையானது 1997 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் ஸ்தாபிக்கப்பட்ட பயிர்ச் செய்கையாகும். இப்பயிர்ச் செய்கையின் பயன்தரும் காலம் தற்பொழுது கடந்துள்ளது. அக்காரணத்தின் அடிப்படையில் கிடைக்கும் விளைச்சலை சேகரித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் பசளை ஈடுபடுத்துதல் மேற்கொள்ளப்படுவதில்லை. அவ்வாறே வருடாந்தம் கிளைகளை வெட்டுதலும் செய்யப்படவில்லை. முந்திரகை விளைச்சல் கிடைக்கும் காலத்தின் போது மாத்திரம் வழக்கமாக காடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றது. | மீள்பயிர்ச் செய்கையின் மூலம் விளைச்சலை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே நடைமுறைச் சாத்தியமான வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஏ) | ஒட்டு மொத்தமாக கவனிக்கும் போது கம்பனியின் 2021 ஆம் ஆண்டிற்கான மொத்த தென்னை விளைச்சலில் 28.5 சதவீதமானது விழுந்த தேங்காய்களாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறு தேங்காய் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அளவானவை விழுந்த தேங்காய்களாகப் பெற்றுக்கொள்வதன் மூலம் தேங்காய் விளைச்சல் காணாமல் | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | உரிய காலத்தில் விளைச்சலை அறுவடை செய்யும் நடவடிக்கை செய்யப்பட வேண்டியதுடன் விழுகின்ற தேங்காய் விளைச்சல் காணாமல் போதல் மற்றும் அழிவடையும் ஆபத்தினைக் குறைப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | போகும் கூடுதல் ஆபத்து காணப்படுகின்றது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஐ) | 2021 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிலத்தை பயன்படுத்துவதனை காட்டும் பதிவேட்டின் பிரகாரம் மொத்த நில அளவான 5,733.23 ஹெக்டயர்களில் பிரதானமாக தென்னைப் பயிர்ச் செய்கை, முந்திரிகை பயிர்ச் செய்கை மற்றும் நெற் பயிற்ச் செய்கைக்காக முறையே 3,826.85 ஹெக்டயர் 758.61 ஹெக்டயர் மற்றும் 432.07 ஹெக்டயர் அளவானவைகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. இன்னும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாத நிலத்தின் அளவாகிய 554.15 ஹெக்டயர்களை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இதற்கு காரணமான விடயங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | இதுவரை பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாத நிலத்தை பொருத்தமான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2021 ஆம் ஆண்டில் கம்பனியின் தென்னை மரங்களுக்கான வயது பகுப்பாய்விற்கு இணங்க முழுத் தென்னை மரங்களின் அளவு 461,837 ஆகும். அவற்றில் 20 வயதினை மிகைத்த தென்னை மரங்களின் அளவு 302,255 ஆகும். அவை முழுத் தென்னை மரங்களின் அளவில் 65 சதவீதம் அளவாக இருந்ததுடன் முந்திரகை மரங்களுக்குரிய வயது பகுப்பாய்வின் பிரகாரம் முழு முந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 53,198 ஆகும். அவற்றில் 1992 இற்கும் 2003 இற்கும் இடைப்பட்ட காலத்தினுள் பயிரிடப்பட்ட மற்றும் 18 வயதினை மிகைத்த முந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 49,980 ஆக இரந்ததுடன் அவை முழு முந்திரிகை மரங்களின் அளவில் | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியால் புதிய தென்னை மற்றும் முந்திரிகை மரங்களை பயிரிடும் செயற்திட்டங்களை அமுல்ப்டுத்துவதற்கும் காணப்படுகின்ற பயிர்களை முறைப்படியாக பராமரித்து அதிக விளைச்சலை பெற்றுக்கொள்வதற்கு ம் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 94 சதவீதமாகும். அதற்கிணங்க முகாமைத்துவத்தினால் புதிய பயிர்ச் செய்கை செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு மற்றும் காணப்படுகின்ற பயிர்ச் செய்கையை முறைப்படியாக பராமரிப்பதற்கும் முடியாதிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஓ) | 2020 ஆம் ஆண்டில் கூட்டிணைந்த புதிய திட்டம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்பட்ட புதிய செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நாற்று மேடை செயற்திட்டத்தில் 1,000,000 தென்னை நாற்றுக்களின் பயிர்ச் செய்கை இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 580,989 நாற்றுக்கள் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தன. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை. | கூட்டிணைந்த திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 05 ஆம் இலக்க காணிக்கு நிர் வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் குழாய்க் கிணறு முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் 40.47 ஹெக்டயர்களின் நீர்த் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நீரில் அமிழ்த்தும் நீரைப் பம்பியில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. இச்செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 541,621 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான செலவு கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படவில்லை. | முகாமைத்துவத்தினால் பதில் வழங்கப்படவில்லை | தேவையான திருத்தங்களைச் செய்து உத்தேச குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத:துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 மே 04 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஜீ3/53/5 ஆம் இலக்க கடித்தின் மூலம் 32 பதவிகள் தொடர்பாக 116 உத்தியோகத்தர்களை கம்பனியின் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட 15 பதவிகள் தொடர்பாக 29 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டது. உரிய வெற்றிடமான பதவிகளை மீண்டும் நிரப்புவதற்கு அல்லது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறைந்த ஊழியர்களின் மூலம் அதிக சேவைகளை வினைதிறனாகவும் ஆக்பூர்வமாகவும் நிறைவேற்றதல் இலாபகமானதாகும். அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுள்ள ஆளணியினரை திருத்தம் செய்யாது கம்பனியின் உற்பத்தி பரப்பளவை எதிர்காலத்தில் விரிவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததனால் ஏற்படும் ஊழியர் தேவைப்பாட்டிற்கு வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அது பேணப்பட்டு வருகின்றது. கம்பனிக்கு அதன் மூலம் நிதி அல்லது பௌதீகரீதியாக ஒரு நட்டம் ஏற்படாததனால் அந்த ஊழியர் எண்ணிக்கை பேணப்பட்டு வருகின்றது. | கம்பனியின் செயற்பாட்டிற்கு பொருந்தும் வகையில் அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியில் மீளாய்வாண்டில் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணியினரை மிகைத்து 01 நிரந்தர பதவியும் 01 ஒப்பந்த பதவியும் நியமிக்கப்பட்டிருந்தது. | உதவிக் கணக்காளர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டது 2008 ஆம் ஆண்டிலாகும். சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012-10-25 ஆந் தகிதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 14 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலம் உள்ள ஒரு நபர் என்பதனாலும் அந்த நபருக்கு நிரந்தர நியமனம் கிடைத்ததன் பின்னர் அதற்கான தகமையும் காணப்படுவதனால் அப்பதவியை இரத்துச் செய்தல் சிக்கலானது என்பதனால் இது தொடர்பாக எங்களால் எடுக்ககூடிய நடவடிக்கை எதுவுமில்லை.<br><br>இரண்டு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் அந்த இரண்டு பேருக்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு இருக்கும் சந்தைப்படுத்தல் உத்தியோத்தர் ஒப்பநத அடிப்படையில் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். தற்பொழுது அந்த உத்தியோகத்தர் சேவையில் இலலை. | அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்ததன் பின்னர் மாத்திரம் நிரந்தர சேவைக்காக தேவையான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |